LIBRARY
07 APR 2009
Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட கலைமாணித் தேர்வு - 2006/2007 (வெளிவாரி)

(ஏப்ரல்/மே 2009)

# ECO 301 Monetary Economics

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. a. "கொடுக்கல் வாங்கலுக்குரிய பொதுவான கருவியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட எதுவும் பணமாகும்". இக்கூற்றினை விளக்குக.
(05 புள்ளிகள்)

b. இலத்திரனியல் பணத்தினை வரையறுக்குக.
(05 புள்ளிகள்)

c. பணத்திற்கான உத்தேசநோக்கக் கேள்வி என்றால் என்ன என்பது பற்றி சுருக்கமாக விளக்குக.
(10 புள்ளிகள்)

02. a. பணநிரம்பல் என்பதன்மூலம் கருதப்படுவது யாது?
(05 புள்ளிகள்)

b. சீராக்கல் செய்யப்பட்ட விரிந்த பணநிரம்பல் ($M_2b$) என்பதனை விளக்குக.
(05 புள்ளிகள்)

c. பணநிரம்பலை தீர்மானிக்கும் காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.
(10 புள்ளிகள்)

03. a. "நிதி முறையினை கண்காணிப்பதும் ஒழுங்குபடுத்துவதும் மத்திய வங்கியின் பிரதான குறிக்கோளாகும்." இப்பணியினை நிறை வேற்றுவதில் மத்திய வங்கி எதிர்கொள்ளும் சவால்கள் எவை?
(10 புள்ளிகள்)

b. மத்திய வங்கியின் இலக்குகள் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பது பற்றிய உமது கருத்தினை விளக்குக.
(10 புள்ளிகள்)

04. a. பணவீக்கத்தின் பொருளாதார விளைவுகளை விளக்குக.
(08 புள்ளிகள்)

b. இலங்கையில் 1977 இற்குப் பின்னரான பணவீக்கத்தின் போக்கினை விளக்குக.
(12 புள்ளிகள்)

05. a. வணிக வங்கிகளின் தொழிற்பாடுகளைக் குறிப்பிட்டு அவற்றினைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

b. பொருளாதார செயலாற்றுகையில் வங்கியல்லா நிதி நிறுவனங்களின் பங்களிப்பினை மதிப்பிடுக?

(10 புள்ளிகள்)

06. a. பண அடித்தளம் என்பது யாது?

(04 புள்ளிகள்)

b. பணப்பெருக்கி என்பதனால் கருதப்படுவது யாது?

(04 புள்ளிகள்)

c. பண அடித்தளத்தினைப் பயன்படுத்தி எவ்வாறு பணநிரம்பலைக் கட்டுப்படுத்தலாம்?

(12 புள்ளிகள்)

07. உலகநிதி நெருக்கடியானது உலகப் பொருளாதாரத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் தாக்கங்கள் பற்றி விரிவாக ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றில் எவையேனும் நான்கிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

(i) பணத்தின் தொழிற்பாடுகள்
(ii) கேள்வித் தூண்டல் பணவீக்கம்
(iii) சுதந்திரமாக மிதக்கவிடப்பட்ட நாணயமாற்று வீதம்
(iv) பிலிப்ஸ் வளையி (Phillips Curve)
(v) சர்வதேச நாணய நிதியத்தின் தொழிற்பாடுகள்

(5x4=20 புள்ளிகள்)

*********